தினகரன் (05.09.2019)

## டிஎன்பிஎல் காகித ஆலை சார்பில்

# 43 குழந்தைகளுக்கு பள்ளிசீருடை வழங்கல்



▶ டி என்பிஎல் காகித ஆலை சார்பில் ஓனவாக்கல்மேடு ஊரைச் சேர்ந்த நலிவுற்ற சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகளை தேர்ந்தெடுத்து இலவச கல்வி வழங்கு கிறது. இவர்களுக்கு 2 செட் பள்ளிச்சீருடைகள், காலணி, மற்றும் உறைகளை செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் வழங்கினார்.

க.பரமத்தி, செப்.5: கரூர் ஒன்றியம் காகிதபுரம் பேரூராட்சியில் இயங்கி வரும் டிஎன்பிஎல் காகித ஆலை பல்வேறு சமுதாயப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ஆண்டுதோறும் காகிதபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட ஓனவாக்கல்மேடு ஊரைச் சேர்ந்த நலிவுற்ற சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு டிஎன்பிஎல் பள்ளியில் இலவசமாக கல்வி வழங்கி வருகிறது.

இதன்படி, நடப்பு கல்வி ஆண்டில் எல்கேஜி முதல் 12ம் வகுப்பு வரை கல்வி பயில்வதற்காக ஓனவாக்கல்மேடு பகுதியை சேர்ந்த நான்கு குழந்தைகள் தேர்வு குழுவினரால் தேர்வு செய்யப்பட்டனர். இக்குழந்தைகளுக்கு எல்கேஜி முதல் 12ம் வகுப்பு வரையிலான அனைத்து செலவினங்களும் டிஎன்பிஎல் காகித ஆலை அறக்கொடை அறக்கட்டளை மூலம் பள்ளி நிர்வாகத்திற்கு செலுத்தப்பட உள்ளது. கடந்த 2007- 08ம் கல்வியாண்டு முதல் நடைமுறையில் உள்ள இந்த இலவச கல்வித் திட்டத்தின் மூலம் இதுவரை 44மாணவ, மாணவிகள் பயன்பெற்றுள்ளனர். இதற்காக ஆண்டுதோறும் ரூ.13லட்சம் செலவிடப்பட்டு வருகிறது. இலவச கல்வி பயிலும் 44 குழந்தைகளுக்கு 2 செட் பள்ளிச்சீருடைகள், காலணி, மற்றும் உறை ஆகியவை வழங்கப்பட்டது.

காகித ஆலைக் குடியிருப்பு வளாகத்தில் நடத்தப்பட்டு வரும் இலவச தட்டச்சுப் பயிற்சி வகுப்புகளில் 6மாத காலம் பயிற்சி முடிந்து அரசு நடத்தும் தட்டச்சு தேர்வில் தேர்ச்சி பெற்ற பெண்கள், இளைஞர்கள் என மொத்தம் 21பேருக்கு சான்றிதழ்களும், மாயனூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.10ஆயிரம் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் தலைமை வகித்து சான்றிதழ்கள் சீருடைகளை வழங்கினார். ஆலை முதன்மை பொது மேலாளர்கள் (மனிதவளம்) பட்டாபிராமன், (உற்பத்தி) தங்கராஜு ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை பொது மேலாளர்கள், அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.